Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 15
இதழ் 271

யாழ்ப்பாணம் ஐப்பசி 24 நமழான் 21 புதன்கிழமை 1 1

10 NOV 1971

மலர் மார்க்
சந்தனாதித் தைலம்
தயாரிப்பாளர்களும் :- ஏக விநியோகஸ்தர்களும்
ஆ. இராசையா அன் சன்ஸ்
(மருந்துக் கடை)
69, கே. கே. எஸ். ரோட்
யாழ்ப்பாணம்.
விற்பனையாளர்கள்:
நடன முருகன்
மெடிக்கல் ஸ்ரோர்ஸ்
நெல்லியடி.
ராஜா மெடிக்கல் ஸ்ரோர்ஸ்
சுன்னாகம்.

## பிரதமர் சிறிமாவின் ஐந்தாண்டுத் திட்டம்

# தனியார் காணிகள், வீடுகளுக்கு உச்ச வரம்பு விதிக்கப்படும்

## தொழிலாளருக்கு உரிமைச் சாஸனம்

## கம்பெனி நிர்வாகங்களில் அரசுக்கும் பங்கு

கொழும்பு, செவ்வாய்

- ★ விவசாயக்காணிகள் தொடர்பான தனியார் உரிமைகளுக்கு உச்ச வரம்பு விதிக்கப்படும்.
- ★ வீடுகள் சம்பந்தமான தனியாரின் உரிமைகள் வரையறுக்கப்படும்.
- ★ தொழில்நடத்தும் கம்பனிகளின் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்படும்.
- ★ புதிய வாடகைச்சட்டம் ஒன்று கொண்டுவரப்படும்.
- ★ சுகாதார சேவையிலுள்ள டாக்டர்கள் தனியாக தொழில் நடத்துவது ஒழிக்கப்படும்.

பிரதமந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேன்று இந்தப் புதிய நடவடிக்கைகள் பற்றிய விபரத்தை வெளியிட்டார்.

அடுத்த ஐந்தாண்டுகளுக்கான அரசாங்கத்தின் திட்டங்கள் பற்றிய பத்திரங்களைத் திருமதி பண்டாரநாயக்கா தேசிய ஆட்சிமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றினார். பின்னர் நாட்டு மக்களுக்கென வானொலியிலும் அவர் செய்தி ஒன்றை ஒலிபரப்பினார்.

சோஷலிஸ சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் எடுத்துவந்துள்ள நடவடிக்கைகளையும், இனி எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளையும் பிரதமந்திரி விளக்கினார். சோஷலிஸம் நினைத்தவுடன் வந்து விடாது. நாட்டின் மக்கள் சமுதாயம் அனைத்துமே ஒன்றாக ஒரே முனைப்பில் செயல்பட்டால் மாத்திரமே இது சாத்தியமாகும் என்றார்.

கஷ்டங்கள் ஏற்படுவது சகஜம், கஷ்டங்களைத் தாங்கிக்கொண்டு சுபிட்சத்தை நோக்கி முன்னேறுவோம் என்றார் பிரதமர்.

சோஷலிஸத்தை நோக்கி முன்னேறுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோது செனட் சபையிலும், பல இயக்கங்களிலும் முட்டுக்கட்டைகள் ஏற்பட்டன. கல்விச் சீர்திருத்தங்களும், வர்த்தகத்துறை மற்றங்களும் ஏற்படும்போது வசதி படைத்தவர்கள் அவற்றைச் சகிக்கவே முடியாதவர்கள் ஆனால் அப்படியான சந்தர்ப்பங்களை எதிர்நோக்க நாட்டிலுள்ள விவசாயிகளும், தொழிலாளர்களும், அறிவு படைத்தவர்களும் தம்மைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும் எனப் பிரதம மந்திரி சொன்னார். தியாகங்கள் செய்யவும், தங்கள் வசதிகளை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளவும் மக்கள் தயாராகவேண்டும் என்றார்.

அடுத்த ஐந்தாண்டுகளில் அரசு மேற்கொள்ளவிருக்கும் திட்டங்கள் பற்றி பிரதமர் குறிப்பிடுகையில் விவசாயக் காணிகள், வீடுகள் சம்பந்தமான தனியார் உரிமைகள் கட்டுப்படுத்தப்படும் என்றார்.

நாட்டின் பெரும்பாலான காணிகள் ஒரு சிலரின் கைகளிலேயே இருக்கின்றன. பெரும்பாலானவர்கள் குடியிருக்க வீடுகூட இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்றார் அவர்.

கருவாக்கோ டி ஓயா விடுவிக்கிறது. கொட்டாலி கயிலுள்ள சேரிகள் வரை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என்றார்.

## மேலதிக காணிகள் சுவீகரிக்கப்படும்

தனியார்களிடம் உள்ள மேலதிக விவசாயக் காணிகள் சுவீகரிக்கப்படும். இவை கிராமப்பிரதிநிதிகளுக்கும்கேணியற்ற வாலிபர்களுக்கும் பங்கீடு செய்வதற்கும் பயன்படுத்தப்படும்.

கோவில்கள் தேவாலயங்கள் கிராமிய பொது ஸ்தாபனங்கள் போன்றவற்றின் கீழுள்ள மேலதிக காணிகள் சுவீகரிக்கப்படமாட்டாது. ஆனால் தேவையேற்படும் போது அவைகளின் நிர்வாகிகளுடன் கலந்து அவை எடுக்கப்படும். அதற்கான நஷ்டஈடும் வழங்கப்படும் என்றார் பிரதமமந்திரி.

### நிந்தகம் முறை ஒழியும்

வாலிபர்களுக்குவிவசாயத்தில் ஈடுபடுவதற்கென சுவீகரிக்கப்படும். காணிகள் பகிர்ந்தளிக்கப்படும். இவைகளுக்கான தேவைகளைக் கவனிக்க கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படும் என்றார். நிந்தகம்முறை முற்றாக ஒழிக்கப்படும் என்றும் திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

கம்பனிகளின் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்படும் என்றும் அவைகளின் நிர்வாகத்தில் அரசும் பங்கு ஏற்கும் என்றார். பயிர்செய்யக் கூடிய காணிகள் யாவையும் அரசு எடுத்துக் கொள்ளும் என்றார்.

தனியாரின் வீடுகள் தொடர்பான உரிமைகள் கட்டுப்படுத்துவது பற்றி குறிப்பிடுகையில் பிரதமமந்திரி தெரிவித்ததாவது:

தனிநபர் ஒருவர் ஒரு வீடும் மேலதிகமான இன்னொருவீடும் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவார். அவரது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வீடுகள் வைத்துக் கொள்ள அனுமதிக்கப் படுவார்கள். பிரஜைகள் ஒவ்வொருவரும் தமக்கென ஒரு வீடு வைத்துக்கொள்வதற்கான ஊக்கம் அளிக்கப்படும். இந்த வீடுகள் சம்பந்தமான வாடகைச்சட்டம் ஒன்று நிறைவேற்றப்படும்.

### கல்வியில் சம சந்தர்ப்பம்

கல்வித்துறையில் சீர்த்திருத்தம் காணப்படும் எனத் தெரிவித்த பிரதம மந்திரி சகல பிள்ளைகளுக்கும் சமசந்தர்ப்பம் கிடைக்க வழிசெய்யப்படும் என்றார்.

புதிதாகச் சேரும் அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு இளைப்பாறற்புச் சம்பளத் திட்டம் ஒன்று கொண்டுவரப்படும் என்றார். உடல் உழைப்புக்கு முக்கிய இடம் கொடுக்கப்படும் என்றார்.

சுகாதாரச் சேவைகள் பற்றி பிரதமமந்திரி குறிப்பிடுகையில் அரசாங்க டாக்டர்கள் தனிப்பட்ட முறையிலும் தொழில் நடத்துவது ஒழிக்கப்படும் என்றார்.

நாடு முன்னேறும் வரையில் கஷ்டங்களைச் சகித்துக் கொண்டு நாட்டின் மேம்பாட்டுக்காக உழைக்க ஒவ்வொரு பிரஜையும் முன்வர வேண்டுமெனப் பிரதம மந்திரி வேண்டுகோள் விடுத்தார்.

## சீன - இந்திய ராஜீய உறவுகள் பலப்படும்

பாரிஸ், நவ. 9

"சீனாவுடன் வழமையான உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளப் பாரதம் தயாராய் இருக்கின்றது" என திருமதி இந்திரா காந்தி கூறினார்.

பிரெஞ்சுப் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறினார்.

சீனாவுடன் ராஜிய உறவுகளை மீண்டும் மாமூல் நிலையில் வைத்துக்கொள்ளத் தயாராய் இருக்கின்றது. எல்லைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படும் வரை காத்திராமல் தூதுவர்களைப் பரிமாறிக்கொள்ளவும் இந்தியா தயாராய் இருக்கின்றது என்று திருமதி காந்தி கூறினார்.

இந்தவகையில் பிரெஞ்சு அரசின் நற்பணிகளை இந்தியா பயன்படுத்திக்கொள்ளுமா என்று கேட்டபொழுது ஏற்கனவே தூதரக பொறுப்பதிகாரிகள் நிலையில் தொடர்புகள் இருக்கின்றன என்றாலும் பிரெஞ்சு அரசு உதவ முன்வந்தால் அதை ஏற்றுக்கொள்வோம் என்றார்.

## சிகரட் பந்தயம் உயிரைப்பறித்தது!

பருத்தித்துறை, செவ். இரண்டு சிகரெட் காரணமாக ஒரு இளந் தொழிலாளி தனது உயிரை இழந்த பரிதாப சம்பவம் கட்டைவேலி நே. க. சங்கத்தில் நேற்று நண்பகல் நடந்தது. நல்லான் கிளியன் என்னும் மேற்படி சங்கத்தொழிலாளி. இன்னொர் தொழிலாளியுடன் இரண்டு சிகரெட்டுகளுக்கும் பந்தயம் பிடித்து மூன்று மூடை மாவைத் தனது முதுகில் ஏற்றியதும் அவ்விடத்திலேயே மயக்கமுற்று விழுந்தார். உடனடியாக இவர் பருத்தித்துறை ஆஸ்பத்திரி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதும் அகால மரணமானார்.

## வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஓட்டுவேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gear wheel cutting) எஞ்ஜினியர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெசின் கொம்பனி 95 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3709

M. G. M. குரக்கன்மா, கடலைமா, ஆட்டாமா, உழுந்துமா, கோப்பிதூள், மஞ்சள்தூள் ஆகியவை எம்மிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் குறிப்பு- வியாபாரிகளுக்கு விசேஷ சலுகை உண்டு. முகவரி இரண்டிக்மில்ஸ், 443, கே.கே.எஸ் ரோட் யாழ்ப்பாணம். 3675

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### தேவை

சுத்தமான வரகு அரிசி, குரக்கன்மா விற்பனை செய்வதற்கு ஏஜண்டுகள் தேவை. P. முத்தையா, வசந்தா இன்டஸ்றீஸ், நாவலடி லேன், வண்.மேற்கு, யாழ்ப்பாணம். 3706

கலிதநவநாவிமங்களும், கோழித்தீனி வகைகளும் மருந்துச்சரக்குவகைகளும், வெவ்வேறு யந்திரங்கள் மூலம் அரைத்துக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு:- V. சிவானந்தன் மனோன்மணி மில்ஸ், 46/1 பிரவுண் ரோட், யாழ்ப்பாணம். 3694

பெற்றோல் நிரப்பும் நிலையத்திற்கு களஞ்சியப் பொறுப்பாளர் தேவை. பிணைப்பணம் ரூபா 5000/- கட்டவேண்டும் மாதச்சம்பளம் எல்லாம் உட்பட ரூபா 500/- விண்ணப்பிக்கவும்:- ஒட்டோஸ் லிமிட்டெட், யாழ்ப்பாணம். 3730

விற்பனைக்கு

குங்குமம் கண்ணைக் கவரும் பல கலர்களிலும் அர்ச்சனைக் குங்குமம், மீனாட்சி குங்குமம் முதலிய பல இனுசுகள் பெற்றுக்கொள்ளலாம் எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 53, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 160 செட்டியார் தெரு, கொழும்பு. 3708

## இரு பிரிவாக இயங்கும்

சங்கானை, செல்வாய் வலிகாமம் மேற்குக் காரியாதிகாரி பிரிவை இருபிரிவுகளாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அடுத்த வருடம் தை மாதம் முதல் புதிய இரு பிரிவுகளும் இயங்குமென நம்பப்படுகிறது. அராலிக் கிராமசபை, வட்டுக் கோட்டைக் கிராமசபை, சங்கானைப்பட்டினசபை ஆகிய பகுதிகள் ஒன்றாகவும் பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கப் பகுதிகள், மானிப்பாய் ப நோ. கூ. சங்கப் பகுதி ஆகியன ஒன்றாகவும் இயங்கும். இந்த மானிப்பாயையும் பண்டத்தரிப்பையும் மத்தியாகக் கொண்ட சண்டிலிப்பாயிலேயே காரியாலயம் அமைவதற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## உடுப்பிட்டிக் கிராமசபை கேள்வி விளம்பரம்

கீழ்க்காணும் ஒரு வேலைகளுக்கும் 1971-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 27-ந் திகதி காலை 9 மணிவரை 'சீல்' வைத்த கேள்விகள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்

கேள்விப் பத்திரங்கள் 25-11-1971 ந ப. 12 மணிவரை ஒவ்வொரு வேலைக்கும் வைப்புப் பணமாக ரூபா 35/-ம் பத்திரப்பணமாக ரூபா 15/- சபை அலுவலகத்தில் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வியின் மறுபிரதி (1) யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் மறுபிரதி (2) பகுதியைத் தரை நிறைவேற்றுப்பொறியியலாளருக்கும் அனுப்பப்பட வேண்டும்

### வீதிகள்

1. கரணவாய் தெற்கு துதாவளை வீதி.
2. உடுப்பிட்டி மாவடி வீதி
3. வல்வெட்டி கிழக்கு பள்ளியானத்தை வீதி.
4. பொலிகண்டி சாண்டசந்தை வீதி
5. கரணவாய் வடக்கு மரக்கையன் கோ வீதி
6. இமையாணன் துவா வீதி.

இ. இ. தர்மரத்தினம், அக்கிராசனர்.
கிராமச்சபை அலுவலகம், உடுப்பிட்டி.
11-11-71. 3124

## மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம் கேள்விப்பத்திர அறிவித்தல்

### செங்குந்தர் சந்தையிலிருக்கும் கடை அறை இல. 5 இன் குத்தகை 1971 – 1974

1. செங்குந்தர் சந்தையிலிருக்கும் கடை அறை இல 5 ஐ 1971-ம் ஆண்டு மார்கழி 1-ம் திகதி தொடக்கம் 1974-ம் ஆண்டு மார்கழி மாதம் 31-ம் திகதி வரையும் குத்தகைக்குக் கொடுக்கும் முகமாக கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 1971-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 19-ந் திகதி வெள்ளிக்கிழமை பி ப.4-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. இது சம்பந்தமாக மேலதிக விபரங்களை அறிய விரும்புவோர் மாநகர அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
8-1-71. 3128

## வாலிபர் குறை நீங்குகிறது

சங்கானை செல்விசுவமடு படித்த வாலிபர்கள் குடியேற்றத்திட்டத்தில் உள்ளோர் இதுவரை அனுபவித்துவந்த தண்ணீர் தட்டுப்பாட்டை நீக்கும்முகமாக அங்குள்ள குளத்தை அரசாங்கம் புனரமைப்புச் செய்ய ஆரம்பித்துள்ளது. இத் திட்டத்தின் கீழ் சிலருக்கு தண்ணீர் சமீபத்தில் இடைமறிக்கப்பட்டு வாலிபர்கள் தொடர்ந்து பெயசாவிகளுக்கு முறையிடு செய்ததைத் தொடர்ந்து இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

அரசாங்க இலாகா

## உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், புதன் அரசாங்க இலாகாக்களிடையே வருடாந்தம் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இம்மாத இறுதியில் நடைபெறவிருக்கின்றது.

இம்முறை இச்சுற்றுப் போட்டியில் கடந்த வருடத்தைவிடக் கடுதலான கோஷ்டிகள் பங்கு பற்றக் கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கடைசியாக நடைபெற்ற இந்தச் சுற்றுப் போட்டியில் யாழ். தபால் கோஷ்டி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. குறிப்பிடத்தக்கது. (நே தி)


ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - வி. என். ஜானகி மாலியா, மாதுரிதேவி நடித்த
மோகினி

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 2-30, 6-30
ஜெய்சங்கர் — ஜெயலலிதா நடித்த
நூற்றுக்கு நூறு

தினசரி 10-30, 10-00
சிவாஜி - சரோஜாதேவி நடித்த
என் தம்பி

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சௌகார்ஜானகி - ரவிச்சந்திரன் (இரு வேடங்களில்) நடித்த
காவியத்தலைவி

4 வது வெற்றிவாரம்
லிடோ [யாழ்நகர்]
காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30.
ஆராதனா
(ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)
ராஜேஷ்கன்னா ★ ஷர்மிளா தாகூர்
சுஜித்குமார் ★ பரீடா ஜலால்
நடித்தது.

2 வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்.





★ ரவிச்சந்திரன்
★ ஜெயலலிதா
★ நாகேஷ்
★ அசோகன்
★ ஷீலா
நடித்த
மூன்றெழுத்து
(ஈஸ்ட்மன் கலர்)

19-ந் திகதி முதல்
என் அண்ணன்

வெல்லி சினிமா (மானிப்பாய்)
தினசரி 6-30, 10-00
சனி ஞாயிறு 2-30
சிவாஜி— சாவித்திரி
பாசமலர்

நாகலிங்கம் சினிமா (சுன்னாகம்)
தினசரி 4-30
சனி ஞாயிறு 10-30
SCOTLAND ACCEPT THE CHALLENGE
தினசரி, 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
வாழ்க்கைப்படகு

சாந்தி சினிமா (சங்கானை)
தினசரி பி.ப. 6-15, 9-30
ஞாயிறு 2-30, 6-15, 9-30
சிவாஜி—பத்மினி நடித்த
குருதட்சணை

MANOHARA
Jaffna
Daily 4-45 7-00 & 94-5
Sat. Sundays 10-30.
Tony Tenser's
in
LOVE IN OUR TIM
(Eastman Color)
(adults only)

இன்று மட்டும்
றீகல் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10 30, மாலை 5 15, 7-15 மட்டும்
AFRICAN SAFARI
(ஆபிரிக்கன் சபாறி)
குறிப்பு: 50 பேருக்குக் குறையாத பாடசாலை மாணவர் குழுவுக்கு விசேட காலைக் காட்சி ஒழுங்கு செய்து தரப்படும்.
தொலைபேசி 360
தினசரி பி. ப 2-00, 10-00
சிவாஜி-தேவிகா; நாகேஷ் நடித்த
அன்புக்கரங்கள்
புதிய கொப்பி


## திருமண அழைப்பு

நிகழும் விரோதிகிருது வருஷம் ஐப்பசி மீ 29-ந் நாள் (15-11-71) திங்கட்கிழமை பகல் 10-00 மணி முதல் 1-00 மணிவரையுள்ள மகர லக்கின சுபமுகூர்த்தத்தில்.

| | |
|---|---|
| எனது புதல்வி<br>செல்வி<br>பத்திராதேவிக்கும் | ஆதிமயிலிட்டி<br>திரு. பொன்னம்பலம் சமாதான நீதிபதி அவர்கள் புத்திரன்<br>கலாநிதி<br>சிவநாதனுக்கும் |

எனது இல்லத்தில் திருமணம் நிகழவிருப்பதால், அத்தருணம் சுற்றத்தவர்களையும் நண்பர்களையும் சமூகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்படி வணக்கத்துடன் வேண்டிக்கொள்ளுகிறேன்.

பச்சைப்பா சடையர் ஒழுங்கை, சோப்பாய் தெற்கு.
10-11-71. 3125
சு. நாகலிங்கம் (முன்னாள் நிர்வாக அதிகாரி) வல்லை மின்தறி நிலையம்

## தேவை

சோண்டாவிலில் அமைந்துள்ள மின்தறி ஆலையில் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள், 10/1, மணிக்கூட்டு வீதியிலுள்ள யாழ்ப்பாணம் ஐக்கிய நெசவு சங்கங்களின் சமாசத்தால் கோரப்படுகின்றன.

1. முகாமையாளர் 1.
2. உதவி முகாமையாளர் 2.
3. பண்டகசாலைப் பொறுப்பாளரும் எழுதுவினைஞரும் 1
4. தொழிலாளி 1.
5 காவலாளி 1.

விண்ணப்பங்களின் முடிவு திகதி 22-11-71.

மேலதிக விபரங்களைச் சமாசத்திடம் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்
யாழ்ப்பாண ஐக்கிய நெசவு சங்கங்களின் சமாசம்,
10/1, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்,
9-11-71. 3126

# பாகிஸ்தானுக்கு இராணுவ உதவி இனி இல்லை

# அமெரிக்கா அதிகார பூர்வமாக அறிவிப்பு

## 36 லட்சம் டாலர் ராணுவ சாதனங்களின் ஏற்றுமதி லைசென்ஸ் ரத்து

நியூயோர்க், நவ. 9

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்கவிருந்த 36 லட்சம் டாலர் பெறு மதியுள்ள ராணுவ சாதனங்களை நிறுத்தியுள்ளது. இவற்றைப் பாகஸ்தானுக்கு ஏற்றுமதி செய்வதற்கு ஏற்கனவே வழங்கப் பட்டிருந்த 'லைசென்ஸ்'களையும் அமெரிகக அரசு ரத்துச் செய் துள்ளது

பாகிஸ்தானுக்குத் தொடர்ந்து ராணுவ உதவி செய்வதில்லை யெனவும் ஏற்கனவே தீர்மானித்திருந்தவாறு வழங்கவிருந்த 36 லட்சம் டாலர் மதிப்புள்ள ராணுவ சாதனங்களைத் தடைசெய்து விட்டதாகவும் அதிகார பூர்வமாக நேற்று முன்தினம் அமெரிக்கா அறிவித்துள்ளது.

### 6 மாதங்களுக்கு முன்னரே......

பாகிஸ்தானுக்கான இந்த ஆயுத உதவியை நிறுத்தி விடுவதென அமெரிக்கா 6 மாதங்களுக்கு முன்னரே முடிவு செய்து விட்டதாகவும் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கடந்த வாரம் நியூயோர்க் சென்றடையுமுன்னரே இச் செய்தி வெளியாகியுள்ளதாகவும் 'நியூயோர் ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

கிழக்கு வங்கத்தில் அமெரிக்க இராணுவ சாதனங்கள் பெருமளவில் பயன்படுத்தப்படுவதாக இந்தியா புகார் தெரிவித்து அதுபற்றிக் கவலை தெரிவித்ததைத் தொடர்ந்தே இந்த ஆயுத உதவி நிறுத்தத்தைப்பற்றி அமெரிக்கா தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

பாகிஸ்தான் அரசுடன் கலந்தாலோசனை நடத்திய பின்னரே அமெரிக்கா இந்த முடிவுக்கு வந்துள்ளதாக பி பி ஸி. தெரிவித்துள்ளது.

### செனட்டர் கென்னடி மகிழ்ச்சி

அமெரிக்கா பாகிஸ்தானுக்கு வழங்கவிருந்த ஆயுத உதவியை நிறுத்தியுள்ளதை செனட்டர் கென்னடி வரவேற்று மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். ஆசிய பிராந்தியத்தில் அமெரிக்கா தனது நிலையைச் சீராக்குவதற்கான நல்லதொரு தொடக்க நடவடிக்கையே இதுவாகும் எனச் செனட்டர் கென்னடி மேலும் தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தானின் இரகசிய தஸ்தாவேஜுகள் தீக்கிரை

புதுடில்லி, நவ 9

வங்காள தேசத்திலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் உள்ள இரகசிய தஸ்தாவேஜுகளை அங்குள்ள பாகிஸ்தான் அதிகாரிகள் இரகசியமாகத் தீக்கிரையாக்கிவிட்டார்களாம்.

புதுடில்லி வந்துள்ள வங்காளதேச தூதுக் குழுவொன்று இத்தகவலைத் தெரிவித்துள்ளது. இத்தகவலைத் தங்களுக்குப் பாகிஸ்தான் தூதரகத்தில் உள்ள சிலர் தெரிவித்துள்ளதாக கூறினர்.

தூதரகத்திலுள்ள ஊழியர்கள் முறையான அறிவித்தலின் ஏமாற்றம் செய்துள்ளதால் அவர்கள் அங்குள்ள போர்பற்றிய விபரங்களையோ அல்லது வேறு இரகசியங்களையோ அறிந்து வெளியிட்டுவிடுவார்கள் என்ற பீதியினாலேயே இத் தஸ்தாவேஜுகள் தீக்கிரையாக்கப்பட்டதாக ராஜதந்திரிகள் கருதுகின்றனர்.

......

## 99-வது வயதில் முன்னாள் கவர்னர் காலமானார்

புளோரிடா, நவ. 9

புளோரிடாவின் முன்னாள் கவர்னர் ஸ்பெசாப் ஹாலண்ட் தமது 99-வது வயதில் ஞாயிற்றுக்கிழமை இரவு காலமானார்.

இரண்டாவது உலகமகாயுத்தத்துக்குப் பின்னர் அமெரிக்காவில் ஏற்பட்டிருந்த கஷ்டநிலையைப் போக்குவதில் முன்னின்று உழைத்தவர் திரு ஸ்பெசாப். 1940-ம் ஆண்டில் கவர்னராகத் தெரிவுசெய்யப்பட்ட இவர் செனட்டராகவும் பல ஆண்டுகள் கடமையாற்றியுள்ளார்.

......

## கிழக்கு வங்க பிரச்னைக்கு

# மக்கள் இணக்கத்துடன் தீர்வுகாண வேண்டும்

## ஜனாதிபதி பொம்பிடோ கருத்து

பாரிஸ், நவ 9

"கிழக்கு வங்கப் பிரச்னை அரசியல் பிரச்னை. இந்த அடிப்படையிலேயே அதற்குத் தீர்வுகாண முயலவேண்டும். இப் பிரச்னையில் சம்பந்தப்பட்ட இருநாட்டு மக்களின் இணக்கத்துடனேயே தீர்வுகாண ஆரம்பிக்கவேண்டும். சம்பந்தப்பட்ட மக்களின் இணக்கமின்றி தீர்வுக்கு முயல்வதோ அல்லது தீர்வுகாண்பதோ நன்மை பயப்பதாக அமையவும் மாட்டாது. அதே வேளையில் அது சரியான தீர்வாகவும் இருக்கமாட்டாது. சம்பந்தப்பட்ட மக்கள் மனதில் பகைமையும் துவேஷமும் வளர்ந்து கொண்டேயிருக்கும்".

மேற்கண்டவாறு பிரெஞ்சு ஜனாதிபதி திரு. ஜோர்ஜ் பொம்பிடோ தெரிவித்துள்ளார். தற்போது பிரான்ஸுக்கு விஜயம் செய்துள்ள பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கு நேற்றுமுன்தினம் மதிய போசன விருந்தளித்துப் பேசுகையிலேயே ஜனாதிபதி பொம்பிடோ இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் இவ்வைபவத்தில் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: இந்தியா-பிரான்ஸ் ஆகிய இரு நாடுகளுக்குமிடையில் எந்தவித பிரச்னைகளோ அல்லது அரசியல் கருத்துவேறுபாடுகளோ இல்லை. தொடர்ந்தும் இவ்விருநாடுகளுக்குமிடையில் நட்புறவும் பரஸ்பர ஒத்துழைப்பும் வலுவடையும்".

சமக்களிக்கப்பட்ட இவ்விருந்து வைபவத்தில் பிரதமர் இந்திரா உரையாற்றுகையில் கிழக்கு வங்க விவகாரத்தில் உலகநாடுகள் போதுமான அளவு கவனம் எடுக்கவில்லை எனக் கண்டனம் தெரிவித்தார்.

'கிழக்கு வங்காளப் பிரச்னையைச் சில நாடுகள் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பிரச்னையெனக் கருதுகிறார்கள். ஆனால் இப்பிரச்னை இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான பிரச்னையல்ல இது பாகிஸ்தான்- கிழக்கு வங்காளம் ஆகிய இருநாடுகளும் சம்பந்தப்பட்ட பிரச்னை" என இந்திரா குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தின் பின்னர் பிரதமர் இந்திரா ஜனாதிபதி பொம்பிடோவையும் பிரதம மந்திரி திரு டெல் மாரசையும் தனித்தனியே சந்தித்துச் சுமார் இரண்டரை மணித்தியாலம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

## சிஹானுக்கை பூட்டோ சந்தித்தார்

ஹொங்கொங், நவ.9

சீனாவுக்கு விஜயம் செய்த பாகிஸ்தான் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பூட்டோவும் அவருடன் சென்ற தூதுக்குழுவும் கம்போடியாவின் முன்னாள் பிரதமமான இளவரசர் சிஹானுக்கைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

ஜனாதிபதி யாஹ்யாகானின் பிரதிநிதியாகப் பீக்கிங் சென்ற பூட்டோ அங்கு பேச்சுவார்த்தைகளை முடித்துக்கொண்டு பாகிஸ்தான் திரும்புகையிலேயே சிஹானுக்கைச் சந்தித்தார்.

......

## 'போர்தொடுக்கும் நோக்கம் இல்லை'

புதுடில்லி. நவ. 9

"இந்தியா பாகிஸ்தான் மீது போர் தொடுக்கவுமில்லை போர் தொடுக்கும் நோக்கமும் இந்தியாவுக்கில்லை. இந்தியாமீது போர் தொடுக்கப்பட்டால் அதை முறியடித்துத் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள இந்தியா தயாராகவிருக்கிறது.'

ராஜஸ்தான் எல்லைப்பாதுகாப்பு படையைப் பார்வையிட்டு அங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் மேற்கண்டவாறு கூறினார்.

போர் மூண்டால் பாகிஸ்தானுக்குக்கிடைக்கும் பிறநாட்டு உதவிகளைப் பற்றியெல்லாம் இந்தியா விரிவாக அறிந்து வைத்திருக்கிறது என மேலும் தொடர்ந்து பேசுகையில் திரு. ஜெகஜீவன்ராம் குறிப்பிட்டார்.

......

## சோவியத் விஞ்ஞானி கருத்து

மாஸ்கோ நவம்பர் 9

சூரியனும் அதைச் சார்ந்த கிரகங்களும் விண்வெளியில் சுழலும்போது பூமியிலுள்ள இரும்புத் தாதுக்களின் பெரும்பாலான பகுதிகள் விண்வெளியிலிருந்து சிதறி விழ்ந்திருக்கலாம்.

குறிப்பிட்ட மூன்று மண்டலங்களில் இரும்புத் தாதுக்கள் அதிகமாக இருப்பதற்கு இதுவே காரணம் என்று மிகாயில் கல்கநோவ் என்ற சோவியத் விஞ்ஞானி கூறுகிறார்.

......

## 'சங்கீதரத்ன' பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம், புதன் நாளை (11-11-71) இராமநாதன் இசைக்கல்லூரியில் சங்கீதரத்ன பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்க்கு நற்சாட்சிப்பத்திரம் வழங்கும் வைபவம் நடைபெறும். இவ்வைபவத்தில் வடமாநிலக் கல்வி அதிபர் திரு. டபிள்யு. டி சி மகாநத்தில பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

## 180 தடவைகள் மீறினராம்

டாக்கா, நவ. 9

திரிபுரா, கமல்பூர் பகுதிகளில் பாகிஸ்தானிய துருப்புகள் குப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் அதை கிழக்குவங்க கொரில்லா படைகளும் விடுதலை முன்னணியினரும் முறியடித்துள்ளதாகவும் டாக்காவில் இருந்து வெளியான செய்தியொன்று கூறுகிறது.

மேற்கத்திய அரங்கில் போர்நிறுத்த கோட்பாட்டை பாகிஸ்தானிய துருப்புக்கள் மீறியுள்ளதாகவும் கூறப்படுகிறது. ஒக்டோபர் முதலாம் திகதியில் இருந்து இம்மாதம் 6-ம் திகதிவரை பாகிஸ்தானிய துருப்புகள் 180 தடவைகள் போர்நிறுத்த கோட்பாட்டை மீறியுள்ளன எனவும் மேற்படி செய்தி தெரிவிக்கிறது.

## சிவாஜிவிழா நடத்துவர்

வெள்ளவத்தை, செவ்

அகில இலங்கை சிவாஜி கணேசன் ரசிகர் மன்றம் அடுத்தமாத இறுதியில் ஓட்டல் தப்ரபேனில் "சிவாஜி விழா"க் கொண்டாட விருக்கின்றது

தமிழ்-சிங்கள சினிமா நட்சத்திரங்களும், நாடகக் கலைஞர்களும் கலந்துகொள்ளும் இந்த விழாவில் இருபத்தைந்து ஆண்டுகளாக நாடகத்திற்குத் தொண்டாற்றி வரும் நடிகவேள் லடிஸ் வீரமணிக்கு அகில இலங்கை நடிகர் சங்க சார்பில் கலையரசு சொர்ணலிங்கம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பர்.

## 'கலைமூலமே மொழி வளரும்'

வெள்ளவத்தை, செவ்.

'ஒரு இனத்தின் மொழி வாழவேண்டுமானால் அந்த இனத்தின் கலைகள் வாழவேண்டும். மக்கள் மத்தியில் கலைகள் பரவவேண்டும். சமுத்திரச் சிங்கள நாடகங்கள் வளர்ச்சி பெற்ற அளவிற்குத் தமிழ் நாடகங்கள் வளர்ச்சி பெறவில்லை என்ற குறைபாடு நிலவி வருகிறது. தமிழ் நாடக நடிகர்கள் மத்தியிலும் மன்றங்களின் மத்தியிலும் போட்டியும் பொறாமையும் நிலவுவதே நமது நாடக வளர்ச்சித் தடைக்குக் காரணமாகும்"

இவ்வாறு இளம் வழக்கறிஞர் புலவர் திரு மு. திருநாவுக்கரசு பெரானை. எம் பீ. ஏ. அரங்கில் நடைபெற்ற லொரேன்ஸ் கிரிலேஷன்சாரின் "யாருக்காக மலர்ந்த பூ" என்ற நாடகத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

"நாடகக் கலைஞர்களுக்கும் நாடகங்களுக்கும் மக்கள் ஆதரவளிக்க வேண்டும். உற்சாகப்படுத்த வேண்டுமே தவிர எள்ளிநகையாடி ஊக்கத்தைக் குறைக்கக்கூடாது" என அவர் சொன்னார்.


# தம்பி அன் கோ.

ஆரம்பமாகி முப்பதாவது ஆண்டில்

1. ரூபா 1000/- ஜுபிலி சேமிப்பிற்கு (Jubilee Deposit) வருடம் ரூபா 125/- வட்டி கொடுக்கப்படும்.
2. ரூபா 500/- ஜுபிலி சேமிப்பிற்கு (Jubilee Deposit) வருடம் ரூபா 63/- வட்டி கொடுக்கப்படும்.

குறிப்பு:-

இந்த ஜுபிலி சேமிப்பில் ஒருவரிடமிருந்து ரூபா 1000/- அல்லது ரூபா 500/- வாங்கப்படும்.

மற்விபரங்களுக்கு:-

தம்பி அன் கோ.

வண்ணார்பண்ணை — திருநெல்வேலி

யாழ்ப்பாணம்.

## 'நன்கொடை போதாது'

யாழ்ப்பாணம், புதன்

ஜனசமூக நிலையங்களுக்கு 1970—71-ம் வருடத்துக்கு அளிக்கப்படும் உதவி நன்கொடை முந்திய வருடங்களைவிட மிகவும் குறைவானது என்றும் குறிப்பிட்ட இந்த வருடத்துக்கு 50 ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது ஜனசமூக நிலையங்களின் நல்ல சேவையைப் பாதிப்பதாக இருக்குமெனவும் யாழ்ப்பாண மாவட்ட ஜனசமூக நிலையங்களின் சமாஜம் பொதுநிர்வாக, உள்ளூராட்சி அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரொன்றில் எடுத்துக் கூறியுள்ளது.

இச்சமாஜத்தின் சார்பில் காரியதரிசி திரு. இராசையா அவர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ள மகஜரில் மேலும் விடுக்கப்பட்டுள்ள வேண்டுகோள் வருமாறு:-

ஜனசமூக நிலையங்களிடமிருந்து மின்சாரக் கட்டணம் ஆலயங்களிலிருந்து வசூலிக்கப்படும் கட்டண விகிதப்படி வசூலிக்கப்பட வேண்டும்.

றெடியோக்களை குறைந்த விலையில் நிலையங்கள் பெறக் கூடியவகையில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

வானொலியில் ஜனசமூக நிலையங்களின் நிகழ்ச்சிகள் ஒலிபரப்ப ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

கலாச்சாரத்துறையில் அபிவிருத்தி மேற்கொள்ள இத்துறையில் ஈடுபட்டுள்ள திறமைசாலிகளுக்கு வெளிநாடுகளில் பயிற்சி பெற வாய்ப்பு அளிக்கப்படுவது போன்று சமூகத்துறையிலும் முன்னணியில் நின்று உழைப்பவர்களுக்கு இவ்வித சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட வேண்டும்.

அரசாங்க வெளியீடுகளெல்லாம் இந்த ஜனசமூக நிலையங்களுக்கு இலவசமாகக் கிடைக்கவும், கல்வி கலாச்சாரத் துறைகள் சம்பந்தமான அரசாங்கத்திரைப் படங்கள் இந்த நிலையங்களில் அடிக்கடி காண்பிக்கவும் ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இவை சம்பந்தமாக அமைச்சரைப் பேட்டிகாண்பதற்கு ஏற்ற திகதியொன்றை அறிவிக்குமாறும் இச்சமாஜத்தினர் குறிப்பிட்ட அமைச்சரையும் சம்பந்தப்பட்டவர்களையும் கேட்டுள்ளனர்.

## விவசாய அறிவுப் போட்டி

வேலணை, செவ்.

இளம் விவசாயிகள் கழக விவசாய அறிவுப் போட்டி அடுத்த மாதம் மூன்று மாவட்டங்களில் நடைபெறவுள்ளது.

விவசாயப் போதனாசிரியர் பகுதிரீதியிலான போட்டி இப்பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட 4 அங்கத்தவர்கள் ஏனைய கழக அங்கத்தவர்களுடன் போட்டியிடுவார்கள். இப்போட்டி தலைமைப்பீட விவசாய போதனாசிரியர் தலைமையில் நடைபெறும். இப்போட்டியில் வெற்றிபெறும் கழகங்கள் இதேபோல் ஏனைய கழகங்களுடன் போட்டியிடும்.

விவசாய விரிவாக்க நிலையங்களுக்கான போட்டியில் ஒவ்வொரு விவசாய போதனாசிரியர் பகுதியிலும் முதலாம் இடத்தைப்பெறும் கழகங்கள் கலந்துகொள்ளும் திருநெல்வேலியில் உள்ள விவசாய விரிவாக்க நிலையத்தில் நடைபெறும் இப்போட்டி கிளிநொச்சி மேலதிக மாவட்ட விவசாய விரிவாக்க உத்தியோகஸ்தர் தலைமையில் நடைபெறும் இப்போட்டியில் இருந்து முதல் 2 கழகங்கள் தெரிவு செய்யப்பட்டு சாவகச்சேரியில் நடைபெறவிருக்கும் இ. வி. கழக விழாவில் அவை மோதிக்கொள்ளும் மாவட்ட ரீதியில் இறுதிப்போட்டி இவ்வருட இறுதியில் சாவகச்சேரியில் நடைபெறவுள்ள இ. வி. கழக விழாவில் நடாத்தப்படும் போட்டியாளர்பெறும் புள்ளிகளைப்பொறுத்து முதல் 5 பேருக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவிருக்கின்றன.

## தீர்மானங்கள்

அராலி, செவ்.

'வாசிக்கும் பழக்கத்தை இளைஞர்களிடையே ஏற்படுத்த அராலியில் பொது நூல்நிலையமொன்று அமைக்கும்படி கிராம சபையை கேட்டுக்கொள்ளும் தீர்மானம் அராலி தெற்கு சரஸ்வதி சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திரு. வே. ஐயாத்துரை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றும் சில தீர்மானங்கள் வருமாறு:

அராலி உபதபால் கந்தோரை தபால் விநியோகிக்கும் தபால் நிலையமாக உயர்த்தப்படவேண்டும்.

அராலி கிராமத்தில் ஒரு பகுதிக்குமட்டுமே இப்போது குடிநீர் வசதி, மின்சக்தி விநியோகம் செய்யப்பட்டிருக்கின்றன. மேற்படி வசதிகள் அராலி கிராமம் முழுமைக்கும் நீடிக்கப்படவேண்டும்.

புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்; தலைவர், திரு வே. ஐயாத்துரை, உபதலைவர், திரு க. கணேசக் குருக்கள், செயலாளர்; செல்வன் செ. திருமலராசா, தனாதிகாரி, செல்வன் க. சபாநாயகம் ஒன்பது பேரடங்கிய நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## குழாய்நீர் விரைவில் கிடைக்கும்

அனுராதபுரம், செவ்.

அனுராதபுரம் புதிய நகருக்கு குழாய்நீர் விநியோகம் துரிதப்படுத்தப்படுமென தெரியவருகிறது. இதற்குரிய முயற்சிகளை நகரசபையும் பொதுநல சங்கங்களும் இதற்குரிய முயற்சிகளை எடுத்துவருவதாகத் தெரிகிறது. தற்சமயம் அனுராதபுரம் நகரசபையினர் சுத்தப்படுத்திய ஆற்றுநீரை புதியநகர் மக்களுக்கு வழங்கிவருகிறது.

## 'சிரமதானத்தால் அரசுக்கு உதவலாம்'

பதுளை, செவ்.

"ஸ்திரமான பொருளாதார நிலையை அடைய இளைஞர்கள் அரசாங்கத்துக்குப் பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் அளிக்கவேண்டும் சிரமதானத்தின் மூலம் இளைஞர்கள் அரசுக்குப் பணத்தை மீதப்படுத்திக் கொடுக்கலாம். அரசு அப்பணத்தை நாட்டின் வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தும்"

வீடமைப்பு நிர்மாண அமைச்சின் உதவியமைச்சர் திரு பி. எச். பண்டார மேற்கண்டவாறு கூறினார்.

இத் தொகுதியில் வீதியமைப்பொன்றில் ஈடுபட்ட தெற்கொல நவோதய சங்க சிரமதான இயக்கத்தினர் மத்தியில் உரையாற்றுகையிலேயே உதவியமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: "கல்வியமைச்சு கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்காக நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றது. நகரத்தில் உள்ள பிரபல்யமான பாடசாலைகளின் தரத்துக்கு கிராம பாடசாலைகளையும் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்படும்".

மேலும் அரசாங்கம் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. காலம் வரும்வரையும் நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். காரியாதிகாரி திரு டி. விஜெயசிங்க, திரு. லெஸ்லி பர்னாண்டோ, திரு ஜயரத்ன உட்படப் பலர் உரையாற்றினர்.

## முடிச்சுமாறிகள் தொல்லை நீங்கியது

அனுராதபுரம், செவ்வாய்

அனுராதபுரம் பஸ் நிலையத்தில் பொலிசாரின் திடீர் நடவடிக்கை காரணமாக 'எப்பம்' செய்வோர்களினதும் முடிச்சுமாறிகளினதும் பல நாள் தொல்லைகள் சமீபத்தில் முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பல முடிச்சுமாறிகளை உடனடியாகப் பிடிக்க இ. போ. சபையும் நல்ல ஒத்துழைப்பைக் கொடுத்ததெனவும் பல 'பிக் பொக்கற்' திருடர்களை பஸ் நிலைய ஊழியர்களே பிடித்துப் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனரெனவும் தெரிவிக்கப்பட்டது.

## புனரமைப்புக் குழு

மாவிட்டபுரம் செவ்,

அளவெட்டி வடக்கு சனசமூக நிலையத்தைப் புனரமைப்புச் செய்ய ஒரு குழு தெரிவுசெய்யப்பட்டுள்ளது. மல்லாகம் இராமசபைத்தலைவர் திரு வி. பொன்னம்பலத்தை தலைவராகவும் மு. சிவப்பிரகாசத்தை உபதலைவராகவும் க. லிங்கம் சு. கணேசமூர்த்தி ஆகியோரை இணைச்செயலாளராகவும் நா. பாலசிங்கத்தை தனாதிகாரியாகவும் கொண்ட குழு புனரமைப்பு வேலையில் ஈடுபட்டுள்ளது.

## ஐ. நா. செல்லும் சீனக்குழு

பாரிஸ், நவ. 9

ஐ. நா. வில் கலந்துகொள்ளும் சீனத்தூதுகோஷ்டியின் முதல் பிரிவு நியூயோர்க் செல்லும் வழியில் பாரிஸ் வந்து சேர்ந்துள்ளது. உபதூதர் பிரதிநிதிகளைக் கொண்ட அடுத்த கோஷ்டி இன்னும் சில தினங்களில் புறப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## கி. வா. ஜ. பேச்சுக்கள்

சுழிபுரம், திங்கள்

கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜெகந்நாதன் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தபோது ஆங்காங்கு நிகழ்த்திய சொற்பொழிவுகளைத் தொகுத்து வழக்கம்பறை சனசமூக நிலையத்தினர் நூலாக வெளியிடவுள்ளனர். இம்மாத முடிவுக்குள் நூல் வெளியாகும்.

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 24-ந் திகதி புதன்கிழமை (10-11-71)

மேஷம்: தொழில்துறையில் புதியவெற்றிகள் கிடைக்கும். மேலதிகாரிகளின் பாராட்டுக்களுக்கு இலக்காவீர்கள்.

ரிஷபம்: புதுத் தொழில் முறைகளை மனம்நாடும். நீண்டதூரப் பிரயாணத்திற்கும் இடமேற்படலாம்.

மிதுனம்: கொடுக்கல்வாங்கல்மூலம் பணநெருக்கடி ஏற்படமுடியும், பிரயாணத்தில் பொருள் நழுவக்கூடும்.

கடகம்: சிறியவிஷபத்திற்கும் இடமுண்டு, பிள்ளையொன்றின் உடல் நலம் கவலையைத் தரலாம். தெய்வ நம்பிக்கை வேண்டும்.

சிம்மம்: பலவழிகளிலும் பணம் செலவாவதற்கு இடமுண்டு. சிறியதவறுக்குக்கூட பெரிய தண்டனை கிடைக்கலாம், மனத்திடம் வேண்டும்.

கன்னி: அடுத்துக் கெடுப்பதற்கு சிலர் முனைவர், சினேகிதர்வழியாக சஞ்சலப்படக்கூடிய செய்திக்கும் இடமுண்டு

துலாம்: தாய்வழிமூலம் சிலருக்கு தனலாபம் கிடைக்கும் அறிஞர்களின் தொடர்புகளுக்கும் இடமேற்படும்.

விருச்சிகம்: உங்கள் முன்னேற்றத்திற்கு அரசியல்வாதி ஒருவர் ஆதரவு கொடுப்பார். இதயத்தில் இன்பம் பொங்கும்.

தனுசு: அரசியல் வாதிகளாகின் மிகவும் கவனத்துடன் நடந்து கொள்ளவும் வரவிலும் தடையுண்டு.

மகரம்: அறிஞர்களின் வருகை உங்களை உற்சாகப்படுத்தும் கலைத்திரவழிகளாலும் கண்ணியம் சேரும்.

கும்பம்: சிலர்வாழ்க்கையில் பெருமுடையுப் ஏற்படலாம், நண்பர்களால் தொல்லைகள் தோன்றக்கூடும். திட்டமிட்டு செயலாற்றவும்.

மீனம்: மனம்போல் வாழ்வு இன்றமையும், சிலர் வாழ்க்கையில் கடல்கடந்த பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன்கிழமை
10-11-71)

(செய்திகள்: காலை 6-30; பகல் 12-45 மாலை 6-00; இரவு 9-00)

294 மீ அலை 59 மீ

காலை 6-15 சமயாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை, 7 00 பக்கச்செய்திகள் 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வளை, 8-00 இசைவேளை. 8-15 இஸ்லாமிய கீதம்.

இரவு 6-10 வாத்திய இசை, 6 15 கிறிஸ்தவ சிறுவர் நிகழ்ச்சி 6-30 பாட்டு. 7-00 கண்ணொலியம், 7-15 திருக்குறள் அமுதம், 7-30 வெளிநாட்டுச் செய்திகள். 7-35 வாத்தியக்கோஷ்டி, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி.





குளிர்மையான,
மெந்தோல் பில்டர் முனை
சிகரெட்டுக்கள். தற்கால நவீன
புகையின்பத்திற்கு
பசுமையுடன் உங்களை
அழைத்துச்செல்வன

நீடிய
குளிர்மையான
மறுமலர்ச்சி
மெட்டஹோர்ன்

CTC சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்

# மாநகரசபைகள் அதிகாரம் அதிகரிக்கப்படும்

## அமைச்சர் பீலிக்ஸ் நடவடிக்கை

கொழும்பு, செவ்.

மாநகர சபைகளுக்குக் கூடிய அதிகாரம் வழங்கத்தக்கவகையில் மாநகர சபை சட்டவிதிகள் விரைவில் திருத்தியமைக்கப்படும்.

மாநகர சபைகளுக்குக் கூடிய வருவாயைக் கொடுக்கும் நோக்குடன் மாநகர சபை விதிகளை வெகுவிரைவில் திருத்தியமைக்கப்போவதாக உள்நாட்டு உள்ளூராட்சி பொது நிர்வாக அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற மாநகரசபை மேயர்கள் மகாநாட்டொன்றிலேயே உள்ளூராட்சி அமைச்சர்



மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

தற்போதைய மாநகரசபை சட்டத்தின் விதிகளின் கீழ் வசிப்பாளர்களின் அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய வருமானத்தை மாநகரசபை பெறவியலாதிருக்கிறது என மாநகர சபை மேயர்கள் பலதடவைகள் புகார்செய்ததையடுத்தே அமைச்சர் பீலிக்ஸ் மேற்படி நடவடிக்கையை எடுக்கத் தீர்மானித்துள்ளார்.

கொழும்பு, தெஹிவளை-கல்கிசை, காலி, நுவரெலியா, மாத்தளை ஆகிய மாநகரசபைகளின் மேயர்கள் இம்மேயர் மகாநாட்டில் பங்குபற்றினர்.

---

கிளிநொச்சியில்

## ரூ. 40 ஆயிரம் செலவில் திறந்த வெளியரங்கு

யாழ்ப்பாணம், புதன்

40 ஆயிரம் ரூபா செலவில் கிளிநொச்சியில் திறந்தவெளியரங்கமொன்று அமைக்கப்படவிருக்கிறது. இம்மைதானம் எதிர்வரும் தைப்பொங்கலன்று திறக்கப்பட்டு 3 நாட்கள் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் நடைபெறுமென்றும் கரைச்சிக் காரியாதிகாரி திரு. இ. யோகநாதன் தெரிவித்தார். கரைச்சிக் கலாச்சாரக் கவுன்சில் விசேஷ கூட்டத்திற்குத் தலைமை வகித்து அவர் பேசினார்.

கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரி, பொறியியலாளர் அலுவலகச்சபை கிளிநொச்சி நகரசபை ஆகியோர் இதற்கு உதவ முன்வந்துள்ளதாகவும், இவர்களுடைய ஒத்துழைப்பை ஒழுங்குபடுத்த வேண்டுமென்றும் அவர் சொன்னார்.

கலாச்சார உத்தியோகத்தர் திரு. எஸ். தேவராசா கரைச்சிப் பகுதியில் உள்ள பல்வேறு கலை அபிவிருத்திச் சபைகளின் நடவடிக்கைகளைக் கொண்ட ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தார். இன்னும் பலர் பேசினார்கள். (குவிம)

---

## சாகித்திய விழாவை யாழ். நகரில் கொண்டாடுவர்

யாழ்ப்பாணம், செவ்

இலங்கைக் கலாசாரப் பேரவையின் தமிழ் இலக்கிய ஆலோசனைக் குழுவினர் யாழ்ப்பாணத்தில் சாகித்திய தினத் தினவிழாவொன்றை எதிர்வரும் ஜனவரி 16ம் திகதி கொண்டாடவிருக்கின்றனர்.

விழாவுக்கான ஒழுங்குகளைச் செய்வதற்கென பிரதேச அமைப்புக்குழு ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அதன் முதற் கூட்டம் கடந்த சனிக்கிழமை மாநகரசபை நூல்நிலையத்தில் நடைபெற்றது.

விழாவையொட்டி ஈழத்தமிழ் இலக்கிய நூல்களைக் கொண்ட கண்காட்சியொன்றினை நடத்துவதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

விழாவின் முக்கிய அம்சமாக இலக்கியமும் தேசிய ஒருமைப்பாடும் என்னும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்றினை நடத்துவதற்கும் இத் தலைப்பில் பேச்சுப் போட்டியொன்றினையும் கட்டுரைப் போட்டியொன்றினையும் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே நடாத்துவதற்கும் தற்கால ஈழத்தமிழ் இலக்கிய சிரேஷ்டர்களைக் கௌரவிப்பதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

---

## யாஹ்யாவுக்கு மேற்கத்திய நண்பர்கள் இல்லையாம்

'கார்டியன்'

லண்டன், நவ. 9

'பாகிஸ்தான் அதிபர் யாஹ்யாகானுக்கு மேற்கத்திய நண்பர்கள் இல்லை. போர் மூண்டால் பாகிஸ்தான் உதவி எதுவுமின்றித் தனித்துநின்று தனக்குத்தானே அழிவைத் தேடிக்கொள்ளும்'

லண்டனிலிருந்து வெளிவரும் 'கார்டியன்' பத்திரிகை மேற்கண்டவாறு தலையங்கத்தில் வெளியிட்டுள்ளது.

மேலும் இக் கார்டியன் பத்திரிகை தலையங்கம் கூறுவதாவது!

அமெரிக்கா பாகிஸ்தானுக்கு வழங்கி வந்த ஆயுத உதவியை நிறுத்தியுள்ளமை கணிசமான பலன் தரத்தக்கதாகவுள்ளது இவ்வாறு அமெரிக்கா செய்துள்ளதால் பாகிஸ்தான் மேற்கத்திய உதவியை இழந்ததோடு தனித்து நிற்கும் நிலையும் உருவாகியுள்ளது இதனால் போர் மூண்டால் மேற்குப் பாகிஸ்தான் தலைவிதி தோல்வியடைவார் அல்லது பதவியில் இருந்து விலகுவார். எவ்வாறு தோல்வினும் பாகிஸ்தானின் நடவடிக்கைகளால் அது தனித்து நிற்கும் நிலையே ஏற்படும்.

மற்றொரு லண்டன் பத்திரிகையான 'டெய்லி டெலிகிறாவ்' அதன் தலையங்கத்தில் யாஹ்யாகான் முஜிபுரை விடுதலை செய்ய மறுப்பதால் நெருக்கடி அதிகரிக்குமே தவிரக் குறையப்போவதில்லை. எனக் கருத்துத் தெரிவித்துள்ளது.

---

கோர்ட்டில் நடந்தது

## நீதிபதி மீது சாட்சி சத்தியம்செய்தார்

உடுப்பிட்டி, செவ்.

நீதிபதி மீது சாட்சியொருவர் சத்தியம் செய்தார். இச்சம்பவம் பருத்தித்துறைக் கோர்ட்டில் இடம் பெற்றது.

'முதலாம் எதிரி என்னைக் கம்பியால் முதலில் தாக்கினார். நான் தாக்குதலிலிருந்து தப்பிக்கக்கொண்டேன் அதைத் தொடர்ந்து அவர் என்னை வாளால் தாக்கிய போது என் கையில் வெட்டுக் காயமேற்பட்டு இரத்தம் சிந்தியதால் நான் மயங்கி விழுந்துவிட்டேன்' எனச் சாட்சி தமது சாட்சியத்தில் தெரிவித்தார்.

உடுப்பிட்டியைச் சேர்ந்த செல்லத்தம்பி என்பவரைக் கம்பி, வாள் முதலிய ஆயுதங்களால் தாக்கிக் காயம் விளைவித்ததாக அதேயிடத்தைச் சேர்ந்த இருவர் மீது வல்வெட்டித்துறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் தாக்கப்பட்ட நபர் சாட்சியமளித்தார்.

வழக்கறிஞர்: நீர் குடிப்பது இல்லையா?

சாட்சி: (நீதிபதியைக் காட்டி) ஐயாவானை நான் பீடி, சிகரெட்கூடக் குடிப்பதில்லை

வழ: நீர் மதுவருந்துவதில்லையா என்பதே கேள்வி. கேட்ட கேள்விக்குமட்டும் பதில் கூறும்

சாட்சி மீண்டும் நீதிபதி. பிள்ளையார். முருகன் ஆகியோர் மீது சத்தியம் பண்ணவே கோர்ட்டில் சிரிப்பொலி கிளம்பியது இச்சமயத்தில் குறுக்கிட்ட நீதிபதி நீர் வீட்டில் கதைப்பது போல் இங்கே கதைக்கக்கூடாது என்று எச்சரித்தார்.

மாஜிஸ்திரேட் திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் விசாரணையை வேறொரு திகதிக்கு ஒத்திவைத்தார்.

---

புதுடில்லி, நவ. 9

இந்தியாவில் உள்ள வங்காள அகதிகளைக் கடும் குளிரில் இருந்து பாதுகாக்க ஆஸ்திரேலிய அரசு கம்பளி உடைகளையும் போர்வைகளையும் பெருமளவில் வழங்கியுள்ளது.

---

## பத்திரிகைக் கவுன்சில் மசோதா விரைவில் வரும்?

கொழும்பு. செவ்வாய்

இலங்கை அரச பத்திரிகைக் கவுன்சில் ஒன்றை ஏற்படுத்த உத்தேசித்துள்ளது தேசிய செய்தி ஏஜன்சி யொன்றை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. புதிதாக வெளிவந்துள்ள 1971 ம் ஆண்டுக்கான இலங்கை பத்திரிகை விபரக்கொத்தில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகை சுதந்திரத்தைக் காப்பாற்றும் நோக்கத்துடன் பத்திரிகைக் கவுன்சில் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் இதற்கான மசோதாவொன்று தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு ஆர். எஸ். பெரேராவால் விரைவில் ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிகின்றது.

அரசு ஆரம்பிக்கவிருக்கும் செய்தி ஸ்தாபனம் உள்ளூர் வெளிநாட்டு செய்தி ஏடுகளுக்கு தகவல்களை கொடுத்துதவுவதாக இருக்கும்.

காமினி நவரத்னவால் தயாரிக்கப்பட்டுள்ள மேற்படி விபரக்கொத்தில் இலங்கைச் செய்திஏடுகள் மற்றும் சஞ்சிகைகள் பற்றிய விபரங்களும் அடங்கியுள்ளன. (பி பீ ஏ)

---

## பேச்சுவார்த்தை திருப்தியில்லை

### 12ந் திகதி கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

வட பிரதேச ஆசிரியர் சங்கங்களின் கூட்டுச்சபைத் தூதுகோஷ்டி நேற்று வடபகுதிக் கல்வி அதிபதியோடு நடத்திய பேச்சுக்கள் சம்பந்தமாக மேற்படி சபை பத்திரிகைக்கு விடுத்த அறிக்கை வருமாறு:

வட பிரதேச ஆசிரியர் சங்கங்களின் கூட்டுச்சபைத் தூதுக்குழு வடபகுதிக் கல்வியதிபதியோடு நடத்திய பேச்சுவார்த்தைகளின் விபரங்கள் கூட்டுச் சபையில் அறிவிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டன. பேச்சுவார்த்தையின் முடிவுகள் திருப்திகரமாக இல்லாத காரணத்தால் கூட்டுச்சபையின் சங்கங்களைச் சார்ந்த ஆசிரியர்களது பொதுக்கூட்டம் ஒன்றை இம்மாதம் 12ந் திகதி யாழ். நகரில் கூட்டவேண்டுமெனத் தீர்மானித்தது. இதேவேளையில் படிவத்தை நிரப்பிக் கொடுக்கவேண்டாமெனவும் நிரப்பிக்கொடுத்த ஆசிரியர்களையும் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறும் கூட்டுச்சபை வேண்டிக்கொண்டுள்ளது.

---

## கடத்தல் பொருள்கள்

கரம்பொன். செவ்வாய்

"பெருந்தொகையான சேலைகள், சாரங்கள், பீடி இலைகள் முதலியவற்றை காரைநகர் கடலில்வைத்துக் கடற்படையினர் கைப்பற்றினராம்.

இக் கடத்தல் சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் 14பேர் 2000 ரூபாவிலிருந்து 500 ரூபா வரையிலான பிணைகளில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட பொருள்கள் ஊர்காவற்றுறை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

---

தமிழ்க்கூட்டுறவுப் பரிசோதகர் பயிற்சி

## "யாழ்ப்பாணத்திற்கு மாற்றுதீர்"

உடுப்பிட்டி, செவ்

"புனரமைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் கடமையாற்றும் பரிசோதனை உத்தியோகத்தர்களுக்கு தாய்ச்சங்கமோ அல்லது இலாகாவோ விசேஷ அலவன்ஸ் வழங்கவேண்டும். தமிழ்க் கூட்டுறவுப்பரிசோதகர்களின் பயிற்சி நாணக் கூட்டுறவுப் பரிசோதகர்களின் பயிற்சி யாழ்ப்பாணக் கூட்டுறவுக் கலாசாலைக்கு மாற்றப்படுவதை வன்மையாக எதிர்ப்பதோடு தொடர்ந்தும் பொல்கொல்லை கூட்டுறவுக்கல்லூரியிலேயே பயிற்சியை நடாத்தவேண்டும். அரசாங்க எழுதுவினைஞர்கள் தமது பத்து வருட சேவையின்பின் தோற்றக்கூடிய எல்லாப் பரீட்சைகளுக்கும் கூட்டுறவுப்பரிசோதகராகப் பத்து வருடம் கடமையாற்றியவர்களும் தோற்ற அரசாங்கம் அங்கீகாரம் செய்யவேண்டும்."

மேற்கண்டவாறு கோரும் தீர்மானங்கள் இலங்கைக் கூட்டுறவுப் பரிசோதகர் கழக 5-வது வருடாந்த மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. கழகத்தலைவர் திரு. இ. வேசுதாசன் தலைமையில் நடைபெற்ற இம் மகாநாட்டில் கீழ்கண்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

'கூட்டுறவுக் கலாசாலையில் கூட்டுறவுப் பரிசோதகர்களுக்குரிய 1-ம், 2-ம் பயிற்சிகளில் சித்தியடைந்தோருக்கு எவ்வித சம்பள உயர்வும் நிர்ணயிக்கப்படவில்லை ஆகவே 1ம் பரீட்சையில் சித்தியடைந்தோ

(6-ம் பக்கம் பார்க்க)

---

## யாருடையது?

யாழ்ப்பாணம், செவ்.

புங்குடுதீவைச் சேர்ந்த சி. பராசசிங்கம் என்பவரால் யாழ்ப்பாணம் பஸ்நிலையத்திலிருந்து அரிசிப் பங்கீட்டுப் புத்தகம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

